EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 51

## சங்க காலப் போர்நெறிகள்

*திருமதி வெ.ரேவதி*
*உதவிப்பேராசிரியர்,, தமிழ்த்துறை,*
*ஜி.டி.என்.கலைக்கல்லூரி,, திண்டுக்கல்.*
Email: revathijai2517@gmail.com

## *முன்னுரை*

மறம் எனப்படும் வீரம் எல்லா நாட்டிற்கும் பொதுவாயினும் வீரத்தை ஈரந்தோய்ந்த வீரமாக மறத்தை அறவழிப்பட்ட மறமாகவும் பகை வெறியை பண்பட்டதகை நெறியாகவும் இலக்கியங்களுக்கு கொடுத்த நாகரிகம் தமிழ் நாகரிகம் ஆகும். அந்நாகரிகத்தை காட்டும் காலப்பெட்டகமாக தொல்காப்பியம் விளங்குவது சாலச்சிறந்தது. புறத்திணை ஒவ்வொன்றிலும் அமைந்துள்ள துறைகள் சங்க காலத் தமிழ் மக்கள் போர் நடத்திய முறையை தெளிவாக உணர்த்துகிறது. போர் நடத்திய முறையையும், போர் நெறிகள் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

## சங்க காலப் போர் நெறிகள்

அகம், புறம் பற்றி எடுத்துரைக்கும் சங்க இலக்கியங்களில் உலகியல் முறைகள் கூறப்பட்டுள்ளன. புறம் பற்றிய இலக்கியங்களில் உலகியல் நெறிகளோடு போர் நெறிகள் பற்றியும் எடுத்துரைக்கின்றன.

## தொல்காப்பியம் காட்டும் போர் நெறிமுறைகள்

தொல்காப்பியத்தில் கூறப்படும் செய்திகள் பழந்தமிழரின் அகவாழ்க்கை, புறவாழ்க்கை ஆகிய இரு பகுதிகளையும் நன்கு விளக்குவனவாக உள்ளன. புறத்திணை ஒழுகலாறு என்பது பெரும்பாலும் போரியல் வாழ்க்கையாகவே அமைந்துள்ளது. அகத்திணையியலில் கூறப்பட்ட ஐந்திணைகளின் புறமாக

கூறப்படும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை ஆகிய ஐந்தும் புறத்திணையின் படிநிலைகளாக் கொள்ளப்படும். இவ்வைந்திணைகளும் பழந்தமிழரின் போரியல் வாழ்க்கை நெறியை பற்றிக் கூறுகின்றன.

## வெட்சித்திணை

புறத்திணைகளுள் முதலாவதாகக் கூறப்படுவது "வெட்சி" ஆகும்.

"வேந்து விடு முனைஞர் வேற்றுப்புலக்களவின்

ஆதந்து ஓம்பல் மேவற்றாகும்". (தொல்.பொருள்.1003)[1]

வெட்சிப்பூவால் தொடுத்துச் செய்யப்பட்ட மாலையை அணிந்து கொண்டு பகைவர் நாட்டின் ஆநிரையைக் களவில் கவர்ந்து வரச் செல்வதுண்டு.

வெட்சித் திணையில் கூறப்படும் துறைகள் ஆநிரை கவரும் போர் முறை பற்றியும், அன்றைய சமுதாய நிலைப் பற்றியும் கூறுகின்றது. மேலும் கரந்தைப்போரில் ஆநிரையை மீட்கும் நிலை கூறப்படுகிறது.

## வஞ்சித்திணை

"வஞ்சி தானே முல்லையது புறனே"
"எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித்தன்றே".
(தொல்.பொருள்.1007,1008)[2]

என்று வஞ்சிப்போர் பற்றித் தொல்காப்பியம் விளக்குகிறது. வஞ்சிப்போருக்குப் படைகள் புறப்படுதல், பகைநாட்டை அடைந்து போர்புரிதல், களத்தில் அரசனும் வீரரும் போர் புரிந்த சிறப்பு, போரில் வெற்றி பெறுதல், போரில் செயற்கருஞ் செயல் புரிந்த வீரரைப் போற்றி ஊக்கமளித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் முறையாக கூறப்பட்டுள்ளன.

## உழிஞைத்திணை

உழிஞைத்திணை என்பது ஓர் அரசனின் தலைநகரில் அமைந்திருக்கும் அரண் அல்லது மதில் என்பதனைப் படையெடுத்து வந்த வேந்தன் தன் படையால் வளைத்துக் கொள்ளுதலும் கைப்பற்றிக் கொள்ளுதலும் என்பதற்கு,

"உழிஞை தானே மருதத்துப் புறனே"
"முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற்று ஆகும் என்ப" (தொல்.பொருள்.
1010,1011)[3]

என்ற தொல்காப்பிய நூற்பாவின் மூலம் அறியலாம்.

## போர் நடைமுறையில் இயல்பாக அமையும் நிலைகள்

நீர்ச்செரு என்பது ஒரு துறை. நீரிலுள்ள பாசி விலக்கப்பட்டாலும் அது பின்னும் ஒன்று கூடுவது போல, போர்ப்படைகள் ஒன்று கூடிப்போர் செய்வதைக் குறிக்கும். நீர்ச்செரு என்பதைப் பாசிப்போர் என்றும் சொல்வர். மதிலின் குடுமியைக் கைக்கொண்ட பின் நீர்விழா நடத்துவதுண்டு. பெருந்தொகையாகப் போரில் யானை, குதிரை, காலாட்கள் இறந்து போவது தொகைநிலை என்று குறிக்கப்படும்.

போர் நடைமுறையில் இயல்பாக அமையும் நிலைகள் இவையேயாம். தமிழ்மக்கள் வீரத்தைப் போற்றிப் பாதுகாத்தனர் என்பது தெளிவாகிறது. எனவே தொல்காப்பியர் கூறுவதே அக்காலப் போர்முறைகள் பற்றிய பொருத்தமான விளக்கமாகும்.

## தும்பைத்திணை

தும்பைத்திணை என்பது தன் வலிமையே தன் துணையாகக் கொண்டு படையெடுத்து வந்த வேந்தனை மாற்றுவேந்தன் எதிர்த்துச் சென்று சண்டையிட்டு அழிக்கும் சிறப்பினையுடையது என்பதற்கு,

"தும்பை தானே நெய்தலது புறனே
"மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்குஞ் சிறப்பிற் றென்ப".
(தொல்.பொருள். 1015,1016)[4]

## என்ற தொல்காப்பிய நூற்பா சான்றுரைக்கிறது

போரிட விழையும் இருமன்னர் தம் நால்வகைப்படையும் அணிவகுத்து, ஒரு குறிப்பிட்ட களத்தில், குறிப்பிட்ட காலத்தில் எதிர்த்துப் போர் செய்து தத்தம் வலிமையை நிலைநாட்ட முற்படுவதே தும்பைப்போர் எனத் தொல்காப்பியர் கூறுகிறார்.

## வாகைத்திணை

"வாகைத்தானே பாலையது புறனே"
"தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப்படுத்தல் என்ப".(தொல்.பொருள். 1019,1020)[5]

வாகை என்னும் புறத்திணை பாலை என்னும் அகத்திணையின புறனாகும்.

வலியும் வருத்தமும் இன்றி, இயல்பாகிய ஒழுக்கத்தானே, தம்முடை கூறுபாடுகளை, இருவகைப்பட மிகுதிப்படுத்தல் என்று கூறுவர்.

## முதல்,கரு, உரிப்பொருள்கள் புறத்திணைகளுடன் பொருந்தும் நிலை

அகத்திணைகட்குக் கூறப்படும் முதல், கரு,உரிப்பொருள்களைப் புறத்திணைகட்கும் பொருத்திக் காணமுடிகிறது.

| | வகை | அகம் | புறம் |
|---|---|---|---|
| 1. | முதற்பொருள் | நிலம்,பொழுது | இடனறிதல், காலமறிதல் |
| 2. | கருப்பொருள் | மக்கள்,விலங்கு, பறவை, மரம், பூ முதலியவை | மக்களின் பழக்கவழக்கங்கள், போர் புரியத் துணையாக அமையும் சூழல். |
| 3. | உரிப்பொருள் | உள்ள உணர்வு(புணர்தல்,பிரிதல், இருத்தல்) | மனநிலை(போர் புரியும் போது ஏற்படும் ஊக்கம், வெற்றி முதலியவை) |

## பண்டைத்தமிழரின் போர் நெறிகள்

புறநானூற்றில் பதினாறு பாடல்கள் பொருண் மொழிக் காஞ்சித் துறைக்கு உரியன. சங்க இலக்கியங்களில் புறத்தைப் பற்றிய இலக்கியங்கள் என்று புறநானூற்றையும், பதிற்றுப்பத்தையும் கொள்வர். இந்நூல்களில் முழுவதும் புறத்திணைச் செய்திகளே கூறப்பட்டுள்ளன. இவற்றில் வீரமும், கொடையும் பாடுபொருளாகக் கருதப்பட்டன.

மேலும், பதிற்றுப்பத்தில் சேர அரசர்களின் பேராற்றல் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சேர மன்னர் கடற்போரில் சிறந்திருந்தனர் என்பது புலப்படுகிறது. நெடுஞ்சேரலாதன் கடலுள் சென்று கடம்பு முதல் தடிந்தான் என்றும், இவன் இமயவரம்பன் என்று கூறப்படுதலால் இமயம் வரை படை நடத்திச் சென்று வென்றவன் என்பதைக் காட்டுகிறது.

திருமதி வெ.ரேவதி

# போர் அறம்

“ஆவு மானியற் பார்ப்பன மக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
-------------------”(புறநானூறு . 9)6

என்று நெட்டிமையார் பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமி பெருவழுதியைப் பாடிய பாட்டால் அவன் படையெடுக்கும் முன்னர் ஆநிரை முதலியவைகளைக் காத்து கொள்ளுமாறு பகைவர்க்கு அறிவித்தனர். போரின் கொடுமையிலிருந்து பார்ப்பணர், பெண்கள் மற்றும் நாட்டுக்கு தேவையான நன்மக்களை ஈன்று தரும் பெண்குலம் அழிதலாகாது என்று கருதினர். இவற்றின் மூலம் சங்ககால மக்கள் கடைபிடித்தப் போர் அறங்களை அறியலாம்.

## போர்க்களத்தில் நடுநிலைமை

படை வீரர் ஒருங்கு கூடித் தங்கியிருந்த கடல் போன்ற பாசறையிலிருந்து நீங்கிச் சென்று வேல் முதலிய படைகளைக் கைக்கொண்டு எதிர்த்து வருபவர் உறவினரென்றும், பிறரென்றும் பாராமல் கை கலந்து போர் செய்தனர் எனப் பெருந்தலைச் சாத்தனார் பாடியுள்ளார். எதிர்த்து வருபவர் உறவினராய் இருப்பினும் தம் நாட்டுநலன் கருதிப் போரிட்டனர் என்பதிலிருந்து போர் வீரர்களின் நடுநிலைமை புலப்படுகிறது.

## போரும், போர்க்களமும்

போர் என்பது ஒரு பன்னாட்டுத் தொடர்புகள் சார்ந்ததும், நாடுகளின் படைகளிடையே நடைபெறும் ஒழுங்கமைந்த வன்முறைகளால் வெளிப்படுவதுமான பிணக்கு ஆகும். கார்ல்வொன் குளோசவிட்ஸ் என்பார் தனது போர் தொடர்பில்(On War) என்னும் தனது நூலில், போர் என்பது “வேறு வழிமுறைகளில் நடக்கும் தொடர்ச்சியான அரசியல் ஊடுதொடர்பு”[7] எனக் குறிப்பிட்டுள்ளார்.

போரையும், போர்க்களத்தையும் குறிப்பதான பல சொற்கள் வழக்கில் இருந்துள்ளன. பறந்தலை, வியன்களம் போன்ற தொடர்கள் அக்காலப் போர்கள் பெருநிலப் பரப்பில் நடைபெற்றன என்பதைக் காட்டுவன. பயிர்களின் விளைச்சலால் கிடைக்கும் பயனை ஏர்க்களத்தில் பெறுதல் போல வீரத்தால் விளையும் பயனை போர்க்களத்தில் பெறலாம் என்று பழந்தமிழர் நம்பினர்.

## களவேள்வி

போர்க்களத்தில் பகையரசர் முரசைக் கொண்டு பகைவர் தம் தலையை அடுப்பாகவும், குருதியை உலைநீராகவும் கொண்டு அதில் இறந்த மனிதர்களின் மூளை முதலியவற்றை பெய்து வீரவளையுடைய தோளாகிய துடுப்பால் துழாவி

உணவுகட்கு களவேள்வி செய்யப்படும். இவ்வாறு களவேள்வி செய்வதை மறக்கள வேள்வி என்றனர்.

ஒரு வீரன் தான் கொண்டுள்ள உறுதியை பலரும் அறிய எடுத்துரைப்பான். இதனை நெடுமொழி, வஞ்சினம் என்று கூறுவர். பழந்தமிழ்ர் போர் முறைகளில் இது ஒரு சிறப்பிடம் பெறுகிறது.

## விழுப்புண்

போர்க்களத்தில் மார்பிலும், முகத்திலும் புண்படுதலை வீரர் தம் பெருமையாகக் கொண்டனர். போர்க்களத்தில் படைக்கலன்களால் தன் உடல் முழுவதும் புண்பட்டுப் பின்னர் அப்புண்கள் ஆறிய நிலையில் அவ்வீரனின் தோற்றம் மருந்து கொள் மரம் போல இருக்கும்.

## தம் மன்னர்களின் பேராற்றலை புலவர்கள் உணர்த்துதல்

புலவர்களுக்கும், பாணர், பாடினி, பொருநர், விறலி போன்றோர் மன்னன் போர் முனைந்த போது தம் அரசனின் வலிமை, ஆற்றலை எடுத்துக் கூறி பகையரசனின் போர் முயற்சியைக் குன்றச் செய்தனர்.

எடுத்துக்காட்டாக, கபிலர் பாரியின் படைவலிமையை, "நாற்பெரும் படையைக் கொண்டு எவ்வளவு முயன்றாலும் பாரியின் பறம்பு மலையை கடைகல் அரிது விறலியர் பின் வரப் பாடி ஆடிச் சென்றால் தன் நாட்டையும், குன்றுகளையும் அளிப்பான் பாரி"(புறநா.109)[8] எனப் பாடுகின்றார். கபிலர் பாடியது பகைவேந்தர்கள் போரைக் கைவிட வேண்டும் என்பதாகும்.

## முடிவுரை

தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள போர் முறைகளும், பண்டைத் தமிழர்கள் மேற்கொண்ட போர் அறம், போரும், போர்க்களமும், களவேள்வி மற்றும் புலவர்கள் மேற்கொண்ட செயல்களும் ஆகிய அனைத்தும் சங்ககாலப் போர் நெறிமுறைகளை எடுத்துக்காட்டுகிறது.

## அடிக்குறிப்பு

1. தொல்காப்பியம் தெளிவுரை, முனைவர் ச.வே.சுப்பிரமணியன், மணிவாசகர்
    a. பதிப்பகம்,சென்னை. பக்.376.

2. மேலது, பக்.380
3. மேலது, பக்.380,381
4. மேலது, பக்.384

5. மேலது, பக்.386
6. புறநானூறு மூலமும் உரையும், ஔவை துரைசாமிப்பிள்ளை, சாரதா பதிப்பகம்,
7. சென்னை.பக்.28
8. On War,Von Clause witz, 1968, Vol III, BkVI - Ch.,Translated by Colonel J.J.Graham,Ninth
9. Impression, Rouledge and Kegan Paul,From the third German Edition, London.
10. 8. புறநானூறு மூலமும் உரையும், ஔவை துரைசாமிப்பிள்ளை, சாரதா பதிப்பகம்,
11. சென்னை.பக்.386